செ.வெ.எண்.86 நாள்.31.10.2017

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தேசிய ஒற்றுமை நாள் உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அலுவலர்கள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தேசிய ஒற்றுமை நாள் உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31.10.2017) அலுவலர்கள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

<u>தேசிய ஒற்றுமை உறுதிமொழி</u>

இந்திய நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், பாதுகாப்பையும் பேணுவதற்கு என்னையே உவந்தளிப்பேன் என்றும் இந்த நல்லியல்புகளை எனது நாட்டு மக்களிடையே பரப்புவதற்கு அயராது பாடுபடுவேன் என்றும் உளமார உறுதியளிக்கிறேன். சர்தார் வல்லபாய் பட்டேலின் தொலைநோக்குப் பார்வையாலும், நடவடிக்கைகளாலும் சாத்தியமாக்கப்பட்ட ஒன்றிணைந்த தேசத்தின் நல்லுணர்வினைப் பேண நான் இந்த உறுதி மொழியை ஏற்கிறேன். எனது நாட்டின் உள் பாதுகாப்பினை உறுதி செய்ய எனது பங்களிப்பினை நல்குவேன் என்றும் உளமாற உறுதி அளிக்கிறேன்.

என்ற உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாசிக்க அதனைத் தொடர்ந்து அலுவலர்கள் வாசித்து உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் சக்தி குமார்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம் பகவத்,இ.ஆ.ப., திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொறுப்பு) திரு.இராமசுப்பிரமணியன், துணை ஆட்சியர்கள், அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி